உ
சிவமயம்

gistered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A 89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷ (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே,

புத். ருஅ] யாழ்ப்பாணம்— விய வரு ஆனிமீ கசஉ (1946 ஜூன் 28 வெள்ளிக்கிழமை) [இல உச

## தேர்தற்றெகுதிகள்

### எவ்வாறு பிரிக்கப்படவேண்டும்

வடமாகாணத்துக்கு ஒன்பது ஸ்தானங்கள்

வடமாகாணத்துக்கு 9 தேர்தற்றெகுதிகள் ஏற்படுத்தப்படுமேயானுல், அவை பின்வருமாறு வகுக்கப்படவேண்டும் என்று அகில இலங்கைத் தமிழர்மகாநாட்டின் சார்பாக ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம், தொகுதி நிர்ணயச் சபைமுன்னர்ச் சென்ற செவ்வாய்க்கிழமை அபிப்பிராயம் தெரிவித்தார்.

1 யாழ்ப்பாணம் பட்டின சங்கப் பகுதி; ஜனத்தொகை 62922.

2 தீவுப்பகுதி: ஜனத்தொகை 53284.

3 வலிகாமம் மேற்கு: ஜனத்தொகை 62092.

4 வலிகாமம் வடக்கு: ஜனத்தொகை 66811.

5 வலிகாமம் கிழக்கு(அச்சுவேலி புத்தூர், கோப்பாய், நீர்வேலியும், யாழ்ப்பாணப் பட்டினத்தின் பகுதிகளாகிய சிவியாதெரு, நல்லூர், வண்ணுர்பண்ணை, கொக்குவில் என்பவற்றையும் கொண்ட ஓர்தொகுதி): ஜனத்தொகை 57373.

6 வடமராட்சி (பருத்தித்துறை, கட்டைவேலி, உடுப்பிட்டி) ஜனத்தொகை 67118.

7 தென்மராட்சி (பச்சிலைப்பள்ளி, கரைச்சி, பூநகரி, துணுக்காய், குடத்தனை, செப்பியன்பற்று) ஜனத்தொகை: 55034.

8 வவுனியா ஜனத்தொகை: 23714.

9 மன்னுர்: ஜனத்தொகை 31798

## இந்தியா எதிர் நடவடிக்கை எடுக்குமா?

கொழும்பு "ரைம்ஸ்" பத்திரிகையின் சென்னை நிருபர் பின்வருமாறு அறிவிக்கிறார்.

இலங்கை இந்தியக் காங்கிரஸின் பழையதலைவரும், இப்போது அதன் காரிய நிருவாகசபையின் அங்கத்தவராயிருப்பவருமான மிஸ்ரர் எம் ஏ. அசீஸ் சென்னைக்கு விஜயம்செய்து இலங்கைவாழ் இந்தியர் நிலையைப்பற்றியும் உருளிவெளிச்சம்பவம், அதன் பயனுக ஏற்பட்ட வேலைநிறுத்தங்கள் என்பவற்றைப்பற்றியும்சென்னை அரசாங்கத்தின் பிரதம மந்திரியான ஸ்ரீஜுத் T பிரகாசம் அவர்களுக்கும், தொழில் மந்திரி ஸ்ரீஜுத் வி. வி. கிரி அவர்களுக்கும் நன்கு விளக்கினுர். அத்துடன் சென்னைச் சட்டசபை அக்கத்தவர்களுக்கும், இந்தியர் நிலையைச் சவிஸ்தாரமாகக் கூறினுர்,

இதன்பயனுகச் சென்னை அரசாங்கம், இலங்கை அரசினர்க்கு விரோதமான நடைவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்திருக்கிறது. இவ்விஷயமாக உடன் நடைவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய மத்திய அரசாங்கத்துக்குச் சென்னை மந்திரசபையினர் கடுமையாகச் சிபார்சு செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

## பேசவேண்டாம்!

### சண்டிருப்பாய்க் கூட்டத்தில் சேர். துரைசுவாமியின் மறுப்பு

ரகுபதி—தலைவர் விவாதம்

"நான் அரசாங்கசபையின் தலைவர் என்ற நியதியில் அங்கு நான் செய்தவற்றை அல்லது சொல்லியவற்றை இங்கு கண்டித்தல் முறையல்ல; ஏனென்றால் நான் அக்கண்டனத்திற்குச் சமாதானம் சொல்ல முடியாமையினுல்" என்று, சுதுமலை சமூகசேவைச்சங்கத்து வருடாந்தக் கூட்டத்தில், தலைமை வகித்த சேர் வைத்தியலிங்கம்துரைசுவாமிகூறினுர்

குறித்த வருடாந்தக் கூட்டத்தில் நியாயவாதி ஸ்ரீ பெ. ரகுபதி, சம்பள மசோதா அரசாங்கசபையில் விவாதத்துக்கு வந்தபோது, ஆசிரியர்களின் வேதனத்தை உயர்த்த வேண்டும் என ஸ்ரீ ஜி ஜி. பொன்னம்பலம் கொண்டுவந்த திருத்தப்பிரேரணையை அரசாங்கசபைத் தலைவர் நிராகரித்தது சரியல்ல என்று கூறினுர். இதனைஆட்சேபிக்கும் முறையிலேயே சேர் துரைசுவாமி மேலே காட்டியவாறு குறிப்பிட்டார்.

தமது பிரசாரணத்தைத் தொடர்ந்து ஸ்ரீ ரகுபதி நிகழ்த்தினுர். அப்போது "நான் அரசாங்கசபைத் தலைவரின் செயலைக் கண்டிக்கவில்லை. ஆனுல் நடந்த விஷயங்களை மாத்திரம் கூறினேன்" என்ருர்.

தலைமைவகித்த சேர், துரைசுவாமி: அதுதானும் நீர் இங்கே சொல்லக்கூடாது.

ஸ்ரீ ரகுபதி: நமது தலைவர்க்கு மனவருத்தம் தரும் இந்த விஷயத்தைவிட்டு, வேறு விஷயத்தைப்பற்றிப் பேசுகிறேன்,

சேர் துரைசுவாமி: இப்படி நீர் இங்கே பேசக்கூடாது.

ஸ்ரீ ரகுபதி தொடர்ந்து பேசுகையில், "ஆசிரியர்களா யுள்ளாரின் நன்மையையும். இந்நாட்டின் கல்வி வளர்ச்சியையுங் கருதியவர்களை மாத்திரமே அடுத்த பாராளு மன்றத்துக்கு அனுப்ப வேண்டும்.........

சேர் துரைசுவாமி: இது ஓர் தேர்தற் கூட்டம் அல்ல: ஆகவே இப்படி எல்லாம் நீர் பேசவொண்ணுது.

ஸ்ரீ ரகுபதி: நான் சொல்லுவது ஒன்றும் எங்கள் தலைவருக்குப் பிடிக்க இல்லை, எதற்கும் பேசவேண்டாம் என்று தடுக்கிருர். ஆகவே இனி நான் பேசுவதாற் பயனில்லையென்று தம்பிரசாரணத்தை இடையில் நிறுத்திக் கொண்டார்.

மாகாணத் தலைவர் திரு. C. குமாரசுவாமி, ஸ்ரீமான்கள் V. வீரசிங்கம், K. சண்முகம், C. தியாகரா[illegible] என்பவர்கள் இதன் பின்பிரசாரண[illegible] செய்தனர் —(நமது நிருபர்)

### 200 கோடி நட்டஈடு

இத்தலி தனக்குச்செய்த அட்டூழியங்களுக்காக 200 கோடி வெள்ளி நட்ட ஈடாகக் கொடுக்க வேணடும் என்று கிறீஸ்நாடு ஐக்கிய தேச ஸ்தாபனத்துக்கு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறது

## வேலை உண்டு!

### ஆனுல் செய்ய ஆள் இல்லை!

நிலப்பகுதி அதிகாரியின் ஓலம்

இந்த ஆண்டில் 10000 ஏக்கர் காட்டுநிலத்தைத் திருத்திப் பண்படுத்தி விவசாயம் செய்யவேண்டும் என்று நிலப்பகுதி அதிகாரி திட்டம் வகுத்திருந்தார். ஆனுல் தான் எண்ணியபடி செய்யமுடியவில்லையென்று இன்று அவர் கூறுகிருர். காரணம் இந்த வேலைக்குப் போதிய ஆட்கள் கிடைக்காமையே.

இலங்கையில் எத்தனையோ பேர் இபபோது தொழிலற்று இருக்கிறார்களே, அவர்களை உம்முடைய திட்டத்துக்கு ஆதரவாக வேலைக்கமர்த்தினுல் என்ன என்று ஓர் பத்திரிகை நிருபர் நிலப்பகுதி அதிகாரியை வினவினுர். 'வேலையில்லாமல் இந்த இலங்கையில் அநேகர் இருக்கிருர்களென்பது உண்மைதான்; ஆனுல் அவர்கள் தங்கள் விடுவாசல்களைவிட்டுத் தம் கிராமத்தைவிட்டு, வெளியூர்களுக்கு அதுவும் காட்டுப்பக்கங்களுக்குப்போக விரும்புகிருர்களில்லை, என்று குறித்த அதிகாரி பதிலிறுத்தார்.

வேலைக்குப் போதிய ஆட்கள் கிடைக்காததால், நிலப்பகுதி அதிகாரி 10000 ஏக்கர் நெல் விளைவிக்க வேண்டுமென்று தாம் போட்டிருந்த திட்டத்தை இப்போது மாற்றிவிட்டனர் 5000 ஏக்கரில்தான் வேலை ஆரம்பிக்க அவர் உத்தேசித்திருக்கிருர்.

## தக்கவர் இல்லை?

### இலங்கைத் தொழிற்சாலை அதிகாரி

அந்நியரை இறக்குமதி செய்ய ஒழுங்கு

இலங்கையில் உள்ள அரசாங்கக் கைத்தொழிற் சாலைகளின் பிரதம முகாமைக்காரராகக் கடமைபார்றக்கூடிய இலங்கையர் இல்லை. இந்த முடிவுக்கு நமது மாட்சிமை தங்கிய இலங்கை அரசாங்கம் வந்திருக்கிறது.

குறித்த இப்பதவிக்குத் தக்க ஒருவரைப் பெறுதற்கான விளம்பரங்களைப் பிரிட்டிஷ் பத்திரிகைகளில் வெளியிடும்படி இலங்கை அரசாங்கம் குடியேற்றநாட்டு மந்திரியைக் கேட்டது இதுசம்பந்தப்பட்ட பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்வதற்கு அப்பத்திரிகைளில் இடமில்லை என்று ஷை மந்திரி கூறிவிட்டார். இதன்பயனுக அரசாங்கம் வேறு வழியில்லாமல், சிங்கப்பூரில் நேசநாடுகளின் யுத்தக் காரியாலயத்தில் கடமை பார்க்கும் மிஸ்றர் L. M. மோபாற் என்பவரை இப்பதவியை ஏற்குமாறு கேட்டார். அவரும் வருஷம் 1600 பவுண் சம்பளத்துடனும் விசேஷ உதவி வேதனத்துடனும் இப்பதவியை ஏற்கச் சம்மதித்துள்ளார்.

மிஸ்ரர் மோபாற் சிங்கப்பூருக்குப் போகமுன், இலங்கைப் பட்டாளத்திலும் கடமை பார்த்தவராவர்.

## கடவுளின் கருணை!

### அவனை நம்பினுல் ஆபத்து இல்லை கஜேந்திரனுக்குதவிய கருணுகரன்

### இறைவன் அருள்பற்றி மகாத்மாகாந்தி

சென்ற 18-ம் திகதி புது டெல்கியில் நிகழ்த்திய பிரார்த்தனைக் கூட்டத்தில் மகாத்மாகாந்தியடிகள் ஆண்டவன் ஆபத்பாந்தவன். அநாதரட்சகன் என்று கூறினுர். அவரின் பிரசாரணச் சுருக்கம் வருமாறு:

"ஆண்டவன் தன்னை நம்பிப் பணியும் அடியாரை ஒருபோதும் கைவிடமாட்டான். அவனன்றி ஓர் அணுவும் அசையாது; அவனே ஆக்குவிப்பவன்; அவனே அழிப்பவன் என்ற உண்மையை நாங்கள் மனப்பூர்வமாக நம்பி அவனையே சதமெனக் கொள்ளல்வேண்டும்.

"கஜேந்திரன் முதலையாற் பீடிக்கப்பட்டது. முதலையின பிடியினின்றும் தப்புவதற்கு யானை தன்னுலானமட்டும் முயற்சித்தது. அது எவ்வளவுக்கெவ்வளவு முயற்சித்ததோ, அவ்வளவுக்கவ்வளவு முதலையின் பிடியும் வலிமை பெற்றது 'என் செயலால் ஆவதொன்றில்லை, இனித் தெய்வமே உன் செயல்தான்' என்று யானை உணர்ந்தது. ஏ, கோபாலா! கோவிந்தா! அநாதரட்சகா! ஆபத்பாந்தவா! அபயம்! அபயம்! என்று அது அரற்றியது. தன்னை இறைஞ்சி அரற்றும் அடியவனுகிய யானையின் அபயக்குரல் கேட்டதும் அரைக்கணப்பொழுதில் அந்தத் துவாரகை நாதன் வந்தான். கஜேந்திரனை முதலையின் பிடியினின்றும் காப்பாற்றினுன்."

"மேலே சொல்லப்பட்ட கதையின் கருத்து என்ன? எவனுயினும் சரி, அவன் மனப்பூர்வமாக ஆண்டவனை வழுத்தி ஓலமிடுவானுயின், அவனுக்கு அநாதரட்சகனுன கடவுளால் கட்டாயம் உதவி கிடைக்கும். இதுதான்இக்கதையின்கருத்து.

'ஆண்டவனிடத்தில் நாம் பக்திகொள்ளவேண்டும், அவனே எல்லாம் என்பதை உணர்ந்து, எது வந்தாலுஞ் சரி, எல்லாம் அவன் செயல் என்று எம்மை அவனிடம் அர்ப்பணம் செய்துவிடல் வேண்டும். தன்னுடைய தலைநகரம் தீப்பற்றி எரிகிறது என்பதைக் கேள்வியுற்ற ஜனக மகாராசன் என்ன செய்தான்? கவலைப்பட்டானு? இல்லை! 'நகரம் எரிந்தால் என்ன? அது என்னைப் பொறுத்ததல்ல!' என்று மனநிம்மதியாய்க் கூறினுன். என்செயலால் ஆவதொன்றில்லை. எல்லாம் அவன்செயல் என்பதை உணர்ந்தவன் ஜனகன்.

"கடவுளை நம்பினேர் கைவிடப்படார். தெய்வபக்தி யுள்ளார்க்கு ஏதும் இடையூறு நேர்ந்தாலும், அதனைப்பற்றி அவர்கள் சஞ்சலமடையார்கள் அவர்கள் 'கண்கெட்ட தெய்வமே' என்று கடவுளைத் தூற்றவும்மாட்டார்கள். எல்லாம் அவன் செயல்என்று மனச்சாந்தியுடன் இருப்பர்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஞ
ஆனிமீ கசஉ வெள்ளிக்கிழமை


## சம்மதம் தெரிவிக்கும் முறையை மாற்றிவிட நோக்கமா?

I

இலங்கை யரசாங்க சபைப் பிரதிநிதிகளை ஊரவர்கள் தேர்தல் செய்யும்போது, இதுகாறுங் கொள்ளப்பட்டு வந்த தாகிய முறை, பிரதிநிதியாக முற்பட்டு வர முயலும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிறத்தை முந்தியே அரசினர் விளம்பரஞ் செய்து, அந்தஅந்த நிறத்திற்குரிய பெட்டியுள் அந்த அங்கத்தவர் பொருட்டுச் சம்மதஞ் சொல்வோர் தமக்குக் கொடுக்கப்படும் பத்திரத்தை மடித்து இரகசியமாக இட்டு விடுவதேயாம்; மேற்படி பெட்டியின் நிறம் மாத்திரமேயல்லாமல் குறித்த முற்பட்டு நிற்பவர் பொருட்டு உபயோகிக்கப்படும் கொடி, விஞ்ஞாபனம், அவர் பொருட்டு வேலைசெய்வோர் தரித்துள்ள அடையாளங்களெல்லாம் அந்த நிறமாகவேயிருக்கும்; இந்த முறை சம்மதங் கொடுக்கச் செல்லும் கற்றூர் கல்லார் எல்லாருக்கும் இலகுவான முறையென்பதுதான் இந்நாட்டிலுள்ள மக்களுள் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது விகிதமானோரின் கருத்தெனக் கொள்ளுதல் தவறாகாது.

ஆனல் இப்பொழுதுள்ள இலங்கை மந்திரிகள் இந்தப் பழைய முறையினுற் சில பிழைகள் தேர்தற் காலத்திலே நிகழ்கின்றன வென்றும், ஆனதால் இம் முறையைத் தவிர்த்து, ஒரு வட்டாரத்திற்குப் பிரதிநிதியாக வர முற்பட்டு நிற்கும் ஒவ்வொருவருடைய நாமத்தையும் அகராதிமுறையாக, தமிழ் சிங்களம் ஆங்கில மென்னும் முப்பாஷையிலும் பத்திரங்களில் அச்சிட்டபின், எவரெவர் அப்பத்திரத்தில் அச்சிடப்பட்ட நாமாவளியில் யாருக்கு சம்மதம் இட விருப்பமோ, அவருடைய பெயருக்கு நேரில் × இப்படியான ஒரு'புள்ளடியை' வரைந்து விடல் வேண்டுமென்றும், அப்படிச் செய்வதனல் தேர்தற்காலத்தில் அதிக தவறுகள் நேரமாட்டா என்றும் அபிப்பிராயங் கொண்டு, இப்புதிய முறையை இனிமேல் வரவிருக்கும் தேர்தலிற் கைக்கொள்ளவேண்டுமென மேலதிகாரிகட்குத் தெரிவித்தற்கு நிச்சயஞ் செய்திருக்கிறூர்களாம்; எழுத வாசிக்க அறியாதவர்கள் சம்மதஞ் சொல்ல நேர்ந்தால், அவர்கள் தாம் இன்ன அங்கத்தவர் பொருட்டுத்தான் சம்மதஞ் சொல்ல வந்ததென்று தேர்தற்ருனத்தில் தலைமைவகித்திருக்கும் அதிகாரிக்கு மாத்திரம் இரகசியமாக (அதாவது வேறு எவரும் அறியாதபடி) தெரிவித்துவிட, அவர் அந்தப் பத்திரத்திற் சொல்லப்பட்டவருடைய பெயருக்கு நேரே புள்ளடி இடவேண்டு மென்பதும் மந்திரிகளுடைய பிரேரணையாகும்.

ஆனல் இந்த மந்திரிமார் இப்பொழுது பிரேரிக்கும் முறை உண்மையிற் புதியதன்று; இந்த முறை 1931ம் ஆண்டில் எல்லாரும் வாக்குச் சொல்லலாமென்ற பிரமாணம் வருதற்குமுந்தி இலங்கையிற் கையாண்டு வரப்பட்டது; அக்காலத்திலும் இந்த நவமான முறை காரணமாகச் சில தடுமாற்றங்களும் பல பிழைகளும் நேர்ந்தனவென அறிந்தே பின் கைவிடப்பட்டது; சம்மதம் இடும்படி தேர்தற் ருனத்திற் சென்ற மக்களுட் படியாதவர்கள் மாத்திரமல்லர், படிப்புள்ளவர்களும், அந்தத் தனிமையான கூட்டுட் புகுந்தவுடனே மனந் தடுமாறி, தாம்குறித்தவருடைய பெயருக்கு நேரே புள்ளடியிடாமல், மற்றவருடைய நாமத்திற்கு எதிரிற் புள்ளடி யிட்டதையும், அங்கு வைக்கப் பட்டிருந்த மேசையிலும், சமீபத்திலுள்ள சுவரிலும், 'தட்டி'யிலும், 'செத்தை'யிலும் புள்ளடியிட்டு வந்தமையையும், அதனுற் பல சம்மதப் பத்திரங்கள் பயன்படாதொழிந்தமையையும் நாம் அறிவோம்.

## பழைய இல்லையே!

### கல்விச் செலவு குறைக்கப்பட்டது

இலங்கை வைத்திய சுகாதாரப்பகுதி மந்திரி மிஸ்ரர் ஜோர்ஜ் E. சில்வா. இலங்கை ஓர் குபேர நாடென்றும், தாம் நினைத்தால் இந்த இலங்கையில் எத்தனை வைத்தியசாலைகளையாவது நிர்மாணிக்கலாம் என்றும் பிரசாரம் செய்து திரிந்தார்.

ஆனல் மிஸ்ரர் சில்வா நினைத்தபடி இலங்கை அத்தகைய குபேர நாடு அல்ல என்பது இப்போது புலனுகின்றது அரசிறையில் 100 க்கு 71 விகிதமான வருமானம், அரசாங்கத்தில் உத்தியோகம் வகிப்பவர்களின் வேதனத்துக்காகச் செலவாகிவிட மீதி 29 விகிதத்தைக் கொண்டே ஏனைய சகலசெலவுகளையும் நடத்தவேண்டியிருக்கிறது. இதன் பயனுக, மிஸ்ரர் சில்வாவின் அநேக கருமங்களைப் பணமின்மை காரணமாக, அடுத்த வருடத்து வரவுசெலவுத் திட்டத்திலிருந்து மந்திர சபையினர் அகற்றிவிட்டனர், கிராமந் தோறும் ஆஸ்பத்திரிகளும் பிரசவச்சாலைகளும்நிறுவுதற்கானதும் அவற்றிலொன்று

அடுத்த வருடத்தில் இலங்கையில் 50 புதிய மத்தியபாடசாலைகள் நிறுவக் கல்வி மந்திரி பணம்கோரியிருந்தார். அவ்வளவு தொகையான வித்தியாசாலைகள் அமைக்கப் பணம் இல்லை என்று மந்திரிசபை கையை விரித்துவிட்டு, ஐந்தே ஐந்து பாடசாலைகள் அமைக்கத்தான் பணம் அநுமதித்திருக்கிறது.

## தமிழர் யாவரும் ஒன்றே

இலங்கையில் அமைக்கப்படவிருக்கும் பாராளுமன்றத்துத் தொகுதிகளை அமைப்பதற்கான விசாரணைச்சபை தனது கருமத்தைச் சென்ற திங்கட்கிழமை ஆரம்பித்துவிட்டது. அச்சபைக்கு முதன்முதல் சாட்சியம் கொடுத்தவர் சேர். ரத்தினஜோதி சரவணமுத்து கொழும்பு நகரத்துக்குமட்டும் 6 ஸ்தானங்கள் பாராளுமன்றத்தில் இருக்கவேண்டும் என்றும், தேர்தல் விஷயத்தில் இலங்கைத் தமிழர்களும் இந்தியத் தமிழர்களும் ஒரேவிதமான மனப்பான்மையைத்தான் கொண்டிருக்கிறூர்கள் என்றும் அவர் தமது சாட்சியத்திற் குறிப்பிட்டார்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—105)

### "நீதிமிகு நல்லோர்க ளெங்கிருந்தாலும் நிறைபட்சம் மறவார்கள்காண்"

"அம்மா கேட்கிறே னென்று குறை யெண்ணுதீர்கள்; அந்தக் கல்பாணம் பின்பு உங்களுக்கு நடந்ததா, அதைமாத்திரஞ் சொல்லிவிடுங்கள்; முந்தியறிய ஆவலா யிருக்கிறேன்" என்று கேட்டான் ஆவலுடன் இக்கதையைக் கேட்டுக்கொண்டிருந்த இராமன்: "அப்பனே, அப்படி நடந்திருந்தால் இப்பொழுது நான் உங்களுடனிருந்து இந்தக் கதையைச் சொல்லவேண்டி நேர்ந்திராது,..." என்று அந்தப் புதிய துறவியம்மாள் சொல்லி முடிப்பதற் கிடையில், விசாலாட்சி இராமனைப் பார்த்து "என்ன இராமன், பூசையாக முந்திச் சந்தமாடப் பார்க்கிருய்; அவசியப்படாதே கதையை ஆதியோ டந்தமாகப் பொறுமையுடன் அவதானமாகக் கேட்டாற்ருன் சுவைக்கும், வன் இராமன் உனக்கு நித்திரைச் சோர்வு உண்டாகிறதா' என்று வினவ, 'இல்லை, அம்மா, கேட்கக் கேட்கப் பரிதாபமா யிருக்கிறது, யோசிக்க யோசிக்கச் சந்திரவதி பட்டபாடு போலிருக்கிறது இந்த அம்மாள் பட்டபாடு; இனி நான் இடையிலொன்றும் வினவமாட்டேன்" என்றுஇராமன் சொல்லிமுடித்தான், அந்தப் பாலதுறவியம்மாள் தன் வரலாற்றைப் பின்னரும் பரிவுடன் பகர்வாளாயினுள்; "எங்கள் விவாகத்திற்கு ஆகவேண்டிய ஆயத்தங்களை யெல்லாம் சிறிய தந்தையார் வெகுமுயற்சியோடு செய்துவந்தார்; சிறியதாயாரும் அகத்தில் என்னவிருந்தாலும் புறத்தில் மிகவும் ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் கருமம் பார்த்து வந்தார்; என்தங்கைக்கு உள்ளத்தி லடங்கா மகிழ்ச்சிதான; ஆனல் நான் சீக்கிரத்திலே தன்னை விட்டுப் பிரிந்திட நேருமே யென்ற கவலை யொன்றிருந்தது; அதனை என் தங்கை சொல்லக் கேட்ட நான் "என் உடற் பிறப்பே, நான் உம்மை விட்டுப் பிரிய நேருமேயென்றண்ணி நீர் துயரப்படவேண்டாம்; நான் எங்கிருந்தாலும் என்உள்ளம் எந்த நேரமும் உம்மிடத்திலே தானிருக்கும்; தூரத்திலே நான்வசிக்க நேர்ந்தாலும் உம்மையும் நீர் என்மேல் வைத்துள்ள உண்மையான அன்பையும் நான் மறக்க முடியுமா? அன்புடையார்க்குச் சமீப மென்றும் தூரமென்றும் பேதமில்லையடியம்மா;

'கதிரவன் உதிப்ப தெங்கே
நளின மெங்கே
களித்துள மலர்ந்த தென்ன
கார்மேக மெங்கே
பசுந்தோகை யெங்கே
கருத்தில் நட்பான தென்ன,
மதியமெங்கே பெருங்குமுத மெங்கே
முகம்
மலர்ந்து மகிழ் கொண்டதென்ன,
வல்லிரவு விடிவ தெங்கே
கோழியெங்கே
மகிழ்ந்து கூவிடுத லென்ன
நிதியரசர் எங்கே யிருந்தாலும்
அவர்களொடு
நேச மொன்று யிருக்கும்
நீதிமிகு நல்லோர்கள்
எங்கிருந்தாலும் அவர்
நிறைபட்சம் மறவார்கள்காண்..."

என்று பெரியோர்கள் பாடியிருக்கிறூர்கள்: அவைபோல நான் எங்கிருந்தாலும் என் அருமைத் தங்காய், உம்மை ஒரு கணமும் மறக்கமாட்டேன் என்று தேறுதல் கூறினேன்; தங்கையும் ஒருவாறு தேறிக் கொண்டாள்.

### உங்கள் விருப்ப மென்ன?

கல்யாணத்திற் காகிய சகல ஒழுங் [illegible]ன், விவாகமூர்த்த தினத்திற்கு மூன்று தினமிருக்க, என்னுடைய பொல்லாத காலத்தினுற்போலும், என் சிறிய தகப்பனுர் எவருங் காத்திராப்பிரகாரம் நோய்வாய்ப்பட்டார்: வந்தநோய் ஆபத்தானதல்ல வெனினும், அவர்படுக்கையிற் கிடக்கப் பெண்வீட்டில் ஏதொரு முயற்சியுஞ் செய்தல முடியாதாயிற்று. அந்த நேரத்தில் வரன்வீட்டுக்காரரும் விவாகத்திற்காகிய எல்லா ஒழுங்குகளையுஞ் செய்துவிட்டு, முகூர்த்த நாளுக்கு முதனுள் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள்: வந்தவர்களும் என் சிற்றப்பருடைய சுகவீனத்தை யிட்டுக் கவலைப்பட்டார்கள்; சிற்றப்பர் அவர்களுட் பிரதானமான அந்த ஐயரைச் சமீபத்தில் கூப்பிட் டிருத்தி, தாம் சுகவீனமாக விருப்பதனுல், எக்கருமமும் பார்க்க வேறுஆள் இல்லையென்றும், ஆதலினுல்விவாகவிஷயத்தைத்தவணையிடுவோமென்றுஞ் சொன்னபோது, அந்தஐயரும் அவர்களுடன் வந்தவர்களும்அதற்குஉடன்பட்டிலர்; பெண்வீட்டுக்கருமங்களையும் தாங்களேவந்து நின்று பார்ப்பதாகச் சொன்னுர்கள்; ஆனுல் என்சிற்றப்பர் தாம்எழுந்து கன்னிகா தானந்தானுஞ் செய்ய முடியாதிருக்கும் நிலைமையிற் கல்யாணக் கொண்டாட்டம் நடத்துவதெப்படி யென்று கவலைப்பட்டார்; அப்பொழுது வரன்பக்கலாக வந்தவர்கள் சிறிது யோசித்துவிட்டு "பெண்ணை வரன் வீட்டிற்கே கொண்டுபோய் ஆக வேண்டியவற்றை யெல்லாம் நாங்களே செய்வோம்; நீங்கள் கடவுளருளால் நோய் சுகமானபின் அங்கே வாருங்கள்; எதற்கும் யோசிக்க வேண்டாம்; சஞ்சலப்பட வேண்டாம்; உங்கள் பிள்ளைவேறு எங்கள்பிள்ளை வேறென்று நாங்கள் கனவிலும் நினைக்கமாட்டோம் எனப் பல சமாதானங்களைச் சொன்னுர்கள்; ஆனுற் சிற்றப்பர் அதற் குடன்பட்டிலர்; அவர் அவர்களைப் பார்த்து "என் பிள்ளையானுல் நான் உடன்பட்டு உங்கள்வசம் ஒப்புவித்தாலும் உலகம் குறைசொல்லாது; இந்தப்பெண் அன்னை தந்தையற்ற அநாதப் பெண்; ஆனதனுற்ருன் வந்தவர்களிடத்தில் ஒப்புவித்து விட்டேன் என்றுஎன்னை அயலட்டத்திலுள்ளார் அறிந்தவர் குறைசொல்லுவார்கள்; நாளைக்குக் கல்யாணம் நடவா தொழிவதாற் பொருள் நஷ்டம் அதிகம் உண்டாகாது; உங்களுக்கு ஏதும் நஷ்டம் வந்தால் நானே அந்த நஷ்டத்திற்கு ஈடுசெய்வேன்; இந்த நேரத்திலே கல்யாணம் நடத்த என்மனம் எள்ளளவும் உடன்படவில்லை" யென்று சொன்னுர்; "பொருள் நஷ்டத்தைப்பற்றிப் பண நஷ்டத்தைப் பற்றிக் காரியமில்லை இலட்சக் கணக்கில் வந்தாலும் நாங்கள் செலவிடச் சித்தமாயிருக்கிறோம்; ஆனுல் எங்கள் இனசனத்தவர்கள் எங்களூரில் மாத்திரமல்லர் வேற்றூர்களிலும் பலர் இருக்கிறூர்கள்; அவர்களெல்லார்க்கும் மங்கலவோலை அனுப்பிவிட்டோம்; அவர்கள் இன்றைக்கு நாளைக்கு எங்கள் வீட்டில் வந்து சேர்வார்கள்; அவர்களுக்கு நாங்கள் எவ்வகையான சமாதானமுஞ் சொல்ல முடியாது" எனக் கவலையோடு வரன்பகுதியார் சொன்னுர்கள்; சிற்றப்பாவிற்குச் செய்வதென்ன வென்பது புலப்படவில்லை; அவருடைய நோய் ஒருபுறமாக, இந்தச்சங்கடமொருபுறமாக அவர் பெரிதுஞ் சஞ்சலப்பட்டவராய் என் சிற்றன்னையையும் மகளையும் என்னையும் மெல்லக் கூப்பிட்டு விஷயம் முழுவதையுஞ் சொல்லி, "உங்கள் விருப்பமென்ன என்று

தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீர சிங்கத்தின் தோற்றம்!

## இந்திய யுவரின் இதயத் துறைவோன் சேனதிபதிப் பட்டம் தாங்கிய வரலாறு

### அன்னையின் விடுதலை: அதுவே லட்சியம் வீரன் சுபாஷின் வெற்றி முழக்கம்

(முற்றொடர்)

**வீரத்தியாகபுருஷர்**

கருமமே கண்ணுயிருக்கும் வீர புருஷர், மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி அருமையும் பாரார், அவமதிப்புங் கொள்ளார்: இந்திய தேசிய ராணுவத்தின் நடவடிக்கைகள் இப்படியாகச் சின்னபின்ன மடைந்ததைக் கண்டு வீரன் ருஷ்பிகாரிபோஸ் சோர்வடையவில்லை. சேனதிபதி மோஹன்சிங்கை ஜப்பானியக் கள்ளன் காராக்கிருகத்தில் அடைத்ததால் அவர் சலிக்கவில்லை. சுதந்திரப்பாதையோ மிகவும் ஒடுக்கமானது: கல்லும் முள்ளும் செறிந்த காடு முரடானது: அவற்றையெல்லாம் சகித்துத் தாண்டிப்போனல் தான் சுதந்திர தேவியின் சோபிதத்தைக் கண்டு களித்து இன்பமடையலாம் என்ற உண்மையை உணர்ந்துள்ள சிங்கேறு ருஷ்பிகாரிபோஷ் சோர்வடையாது. இயக்கத்து முழு அலுவல்களையும் தாமே பொறுப்பேற்று நடத்தினர். இந்திய தேசீய ராணுவத்தைப் புநருத்தாரணஞ் செய்வதில் முனைந்தார். ஜப்பானியரால் சிறைப்பட்ட இந்திய வீரரில் விருப்பமானவர்கள் தேசிய இராணுவத்திற் சேரலாம் எனப் பிரசித்தஞ் செய்யப்பட்டது. யுத்தவீரர் மாத்திரமன்றி சாதாரண இந்தியரும் இராணுவத்திற் சேர அநுமதிக்கப்பட்டது. இப்படியாக அமைக்கப்பட்ட ராணுவத்துக்குச் சேனபதியாக ஸ்ரீஜுத் J. K பொன்ஸலே என்ற மராட்டிய வீரன் நியமிக்கப்பட்டார்.

**இராணுவப்பயிற்சிச் சாலைகள்**

முதன்முதற் பயிற்சிச்சாலை கோலாலம்பூரில் ஸ்தாபிக்கப்பட்டது பாரத யுவரின் பயிற்சிக்கழகம் என்பது அதன்பெயர். அத்துடன்உயர்தர உத்தியோகத்தரைப் பயிற்றுதற்காக ஹபீபுர்றஹிமான் தலைமையில்சிங்கப்பூரில் ஓர் ப‍யிற்சிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. மேல் உத்தியோகத்தரை நியமிக்கும் விஷயத்தில் எவர்க்காவது முகமன் காட்டப்படவில்லை. எந்தச் சிறிய உத்தியோகத்தனும் மேல்உத்தியோகத்தராகி வர அவனுக்குப் போதிய சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டன. இப்படியான வேலைகள் ஜரூராக நடக்க, யுத்தக்கைதிகளாக இருந்த அநேக இந்தியப் போர் வீரர் இவற்றைக் கண்டு தேர்ந்து, இந்திய தேசீய ராணுவத்தில் ஆயிரக்கணக்கில் வந்து சேர்ந்தனர். சாதாரண ஜனங்களும் ஆயிரம் ஆயிரமாக இந்திய தேசிய ராணுவத்திற் சேர்ந்தனர். இதன் பயனக, முன்னர் ராணுவத்தினர்க்கும் பொதுஜனங்களுக்குமிடையேயிருந்த மனக்கசப்பு மெல்ல மெல்லவாக நீங்கலாயிற்று.

**வீராதிவீரன் தோற்றம்**

இப்படியாக வேலைகளை எல்லாம் தனியேசெய்வதென்றால்லேசானகாரியமா? ஓர் பெரிய இராச்சியத்தை அமைப்பதுபோன்ற வேலையல்லவா இது? இந்த மகத்தான வேலையைத் தன்னந்தனியே செய்த ருஷ்பிகாரி போஸ், இனியுந்தான் நிலைமையைச் சமாளிக்கமுடியாது என்று உணர்ந்துபோலும், வீராதிவீரன் சுபாஷ் சந்திரபோசுக்குச் செய்தியனுப்பியிருக்கலாம். எது எப்படியிருந்தபோதிலும், உலகமக்கள் அதிசயப்பட, பாரதமக்கள் அகமகிழ, பிரிட்டிஷ் சிங்கம் இடியேறுகேட்ட நாகம் போலப் பதைபதைக்க, ஒருநாள் சமூகமானன் வீராதிவீரன் சுபாஷ் சந்திரபோஸ் நம்மவரிடை! டோக்கியோ நகரத்தில் வீரன் சுபாஷ் நிற்கிறன்என்றசெய்தி ரேடியோ மூலம் வெளிவந்தது கிழக்காசியாவில் உள்ள இந்திய மக்கள் ஒரே குதூகலமடைந்தனர். எங்கும் சுபாஷ் சந்திரபோஸைப் பற்றியே பேச்சு; கோடிக்கணக்கான இந்திய வாலிபரின் சிங்கேறு எங்கே? அவனை எப்போது பார்க்கலாம்? பார்த்து மகிழலாம்?என்று கிழக்காசிய மக்கள் அங்கலாய்ப்புடன் நின்றனர்.

**சுபாஷ் — ருஷ்பிகாரிபோஸ் சந்திப்பு**

டோக்கியோ நகரில் ருஷ்பிகாரி போஸ், சுபாஷ் சந்திரபோசைச் சந்தித்தார். இந்திய சுதந்திர இயக்க ஆரம்பம் தொடக்கம் கடைசிவரை உள்ள நிலையை ருஷ்பிகார்போஸ் சுபாஷிற்கு எடுத்துக் கூறினர். கடைசியில் ஓர்மகாநாடு சிங்கப்பூரிற் கூடுவதென்றும், அம் மகாநாட்டுக்குக் கிழக்காசியாவிலுள்ளஇந்தியசுதந்திரஸ்தாபனங்களுக்குஅழைப்பு விடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது அதன்படி 1943-ம் ஆண்டு ஜூலை மீ 4 ந் திகதி சிங்கப்பூரில் உள்ள பெரிய சினிமா மண்டபத்தில் மகாநாடு கூடியது. மகாநாட்டுக்கு விஜயம் செய்யும் ஒருவர்க்குப் பிரவேசச் சீட்டுக் கிரயம 100 வெள்ளியாக விதிக்கப்பட்டிருந்தும், ஆயிரக்கணக்கானோர் இடமின்றித் திரும்பிச் செல்லவேண்டியதாயிற்று.

**மகாநாடு**

மகாநாடு ஆரம்பமாயது. ருஷ்பிகாரி போஸேமகாநாட்டை ஆரம்பித்து வைத்தார். முதல் நடைவடிக்கைகளுக்குப் பிறகு, ருஷ்பிகாரி போஸ், டோக்கியோ நகரத்தில் இருந்து விலைமதிப்பிடற்கரிய மாணிக்கம் ஒன்றைத் தான் கொண்டுவந்திருப்பதாகக் கூறி, அது இதுதான் என்று தன் வலப்பக்கத்த மர்ந்திருந்த சுபாஷைக் காட்டினர். உடனே லட்சக்கணக்கான கோடையிடிமுழக்கங்கள்போல, மகாநாட்டுப் பிரதிநிதிகள் ஆனந்த மிகுதியால் ஆர்ப்பரித்தனர். ருஷ்பிகாரிபோஸ், இனித் தன்னால் இந்த மகத்தான பதவியைத் தாங்குதல் இயலாதென்றும், அதனைப் பெருமையுடனும் கௌரவத்துடனும் வகிக்கக்கூடியவர் சுபாஷ் சந்திரபோஸ் ஒருவர்தான் என்றும் கூறினர். ருஷ்பிகாரிபோஸின் பிரேரணையைச் சமூகமாயிருந்தோர்அனைவரும் அங்கீகரித்தனர். ஜே கீதம் வானைப் பிளந்தது, வீரன் எழுந்தான்! ஹா! என்ன தோற்றம்! என்ன வசீகரம்! என்ன கம்பீரம்! அவனுடைய ஒவ்வொரு அங்கமும் வீரக்கனல் வீசியது: அவனுடைய ஒவ்வொரு பார்வையும் வீரவே[illegible]கையூட்டியது. "என்னை ஈன்ற அன்னை பாரததேவி: அவள் — அரியாசனத்தில், அகிலம் முழுவதும் தன் பொன்னடி போற்ற பொலிவுடன் வீற்றிருக்கவேண்டிய எனது அன்னை - இன்று அடிமைக் குழியிற் கிடக்கின்றாள். அவளை விடுதலை செய்வதே [illegible] தேன். உங்களுக்குச் சேனதிபதிபதியாக ஒருப்படுகிறேன். ஆனல் நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் மேலான லட்சியத்தை உணர்ந்து, எவ்விதமான மனச்சோர்வு, நிபந்தனையின்றி எனக்கு உங்கள் மனப்பூர்வமான ஒத்துழைப்புத் தரல்வேண்டும்" என்று வேண்டினன்.

**தீவிர முன்னேற்றம்**

இதன்பின் இந்திய தேசிய இயக்கம் அதிதீவிரமுன்னேற்றம் அடைந்தது. ஒவ்வொரு நாளும் உலகம் திடுக்கிடக்கூடிய சம்பவங்கள் நிகழ்ந்து வந்தன. 1943 ம் ஆண்டு ஜூலை மீ 5-ந்திகதி, இந்தியதேசியராணுவ அங்குரார்ப்பணம் உத்தியோக தோரணையில் உலகத்துக்கு அறிவிக்கப்பட்டது. அன்று சிங்கப்பூர் முனிசிப்பல் கட்டிடத்துக்கு முன்னல் ஓர் பெரிய பொதுக்கூட்டமும் கூட்டப்பெற்றது. கூட்டம் தொடங்க வெகு நேரத்துக்கு முந்தியே லட்சக்கணக்கான மக்கள் எள்ளிட இடமின்றிக் கூடிவிட்டனர். ஆண்கள் மாத்திரமன்றிப் பெண்களும் பெருந்தொகையினராகச் சமூகமளித்திருந்தனர். மேடை மூவர்ணக் கதர்க்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டது. ஒலி பெருக்குங் கருவிகள் மைதானமெங்கும் வைக்கப்பட்டிருந்தன. எப்போது வீரன் வருவான்! எப்போது பிரிட்டிஷ் சிங்கத்தின் வாலைப்பிடித்து ஆட்டிவரும் வீராதிவீரன் வருவான்! எப்போது அவனுடைய வீர மொழிகளைக் காதாரக் கேட்போம் எனக் கெடியாரத்தைப் பார்த்துக்கொண்டே அந்த ஜன சமுத்திரம் அலை மோதிக்கொண்டு நின்றது. குறித்த நேரமும் வந்தது சிங்கேறு போலத் தோற்றினன் மேடைமீது வங்கநாட்டுச் சிங்கம் சுபாஷ் சந்திரபோஸ்!

வரும்





இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:

எங்கும் கியாதிபெற்ற எமது ரேடியோ பீடிகளையே எப்பொழுதும் உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள்.

எல்லாஊர்களிலும் கிடைக்கும்

மொடேண் ஏஜென்சீஸ்,

சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)

**நவீன வேலைப்பாடுள்ள**

பவுன் நகைகள், வெள்ளி நகைகள், வைர நகைகள், கல்நகைகளுக்கு

நம்பிக்கைக்கும் நாணயத்துக்கும் சிறந்த இடம்

**கந்தையா பெரியதம்பி**

நகை வியாபாரி, 509 காங்கேசந்துறை ரேட்

தட்டாதெரு யாழ்ப்பாணம்

Mis 196 7-1 — 7-7 (வெ)

WISE PARENTS USE

**GRIPE-VIT-D**

FOR BABIES

S. R. REMEDIES, TRICHY.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:

மொடேண் ஏஜென்சீஸ்,

சிலாபம், (இலங்கை)

(Mis 185, 31—31-12-46)

**பசந்த லேகியம்**

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவ, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறூத்தல் விலை ரூபா 25
அரைறூத்தலுக்கு ரூபா 12-50
கால்றூத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)

**தந்தரோகசஞ்சீவி**

கந்தசாமி வைத்தியர்

**சந்தனுதித் தயிலம்**

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சிசா மூலிய செலவு வேறு:

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26-4 46—25-10-46


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டாம்பிள்ளை அமெரிக்கா

## அணுக்குண்டு கொண்டு வெருட்டும் விந்தை உலகத்தை அடக்கியாள ஆசையா?

### எண்ணியபடி எதுவும் நடக்காது உலக சமஷ்டியில் எல்லார்க்கும் சுதந்திரம்

"பிரபுத்த பாரத" ஆசிரியர் ஸ்ரீமத் சுவாமி யோகீஸ்வரானந்தா அவர்களின் கட்டுரையில் இருந்து மொழிபெயர்த்துத் தொகுக்கப்பட்டது: தொகுத்தவர் "ஸ்ரீதரன்")

இன்று அமெரிக்காவைப் பாருங்கள்! அதன் வல்லமைதான் என்ன? அதன் சக்திதான் என்ன! ஓர்பிரம்ம ராட்சதன்போல இந்த அண்டமெல்லாம்கடுநடுங்கத் தனது உருவத்தைக் காட்டிவருகிறது."நானே வலியான்: நான் காலாவிடும்பணியைத் தலையாற் சுமந்து செய்பாதவர்களுக்கு அதோகதிதான்" என்று தன்னிடம் உள்ள அணுக்குண்டைக் காட்டி உலகைப் பயப்படுத்துகிறது. தானே இன்று உலகில் மிகப் பெரிய வல்லரசு என அமெரிக்கா தன்னம்பிக்கைகொண்டு இன்று கருமம் ஆற்றி வருகிறது. உலகம் யாவும் தனது ஆணைக்குக் கீழ்ப்பட்டு நடக்கவேண்டும் என அது நினைக்கிறது.

அமெரிக்க ஜனதிபதி மிஸ்டர் ட்ரூமன் நத்தார் தினத்தின்போது உலகுக்கு ஓர் செய்தி விடுத்தார். அது பின்வருமாறு:

"பல காலமாகக் கோரயுத்தம் நிகழ்ந்தது. இந்தக்காலத்தில் எத்தனையோ நத்தார் தினங்கள் வந்துபோயின. அவற்றுள் ஒன்றையாவது உலக மக்கள் சாந்தியுடனும், சமாதானத்துடனும் மனக்களிப்புடனும் கொண்டாட முடியவில்லை. அப்படி மனச்சாந்தியுடன் கொண்டாடப்படக்கூடிய நத்தார்ப் புண்ணியதினம் எப்போது வரும் என உலக மக்கள் எதிர்பார்த்திருந்தனர். அத்தகைய தினம் வந்துவிட்டது இன்று. சமாதானம் ஏற்பட்டுவிட்டது. அத்துடன் சமாதானமும் சாந்தியும் சந்தோஷமும் ஏற்படுகின்றன. அன்பின் உறைவிடமானயேசுநாதர் அவதரித்தது இன்று. அந்த அன்பின் மூலமாக உலகில் உள்ள சகல தீமைகளையும் நாம் ஓட்டுவோம். யேசுநாதர் மலைமேல் இருந்து ஆற்றிய போதனைகள் மூலமாகத் தீர்க்கபடியாத பிரச்சினை இந்த உலகில் ஏதாவது இருக்கும் என்று நான் நம்பவில்லை.

"நாம் எமது பகைவரை முறியடித்துவிட்டோம். இனி வருங்கால வேலைக்கு நாம் நம்மைத் தயார்ப்படுத்தவேண்டும்; இவ்விஷயத்தில் நாம் சோர்வடையக்கூடாது. சளைக்கக்கூடாது ஐசேயா என்ற தீர்க்கதரிசி அன்று, "அவர்களின் இரத்தம் தோய்ந்திருந்தவாள்கள் இனிக் கலப்பைகளாகட்டும்; ஈட்டிகள் பயிர்த்தொழிலுக்குரிய கத்திகளாகட்டும்; உலகசாதியார் ஒருவர்க் கொருவர் போர் தொடுக்காமல் இருப்பாராக; யுத்தத்தின் நினைவே இல்லாதிருப்பாராக" என்று கூறியதைக் கடைப்பிடிப்போம். அப்படியான காலம் எப்போது வருமோ, அப்போதே இப் பூமண்டலம் உண்மையிற் பாமண்டல சாம்ராஜ்யமாகும்."

ஜனதிபதி ட்ரூமன் எவ்வளவு அழகாகப் பகதியுடன் பேசியிருக்கிறார்! என்ன நாசூக்காகச் சொல்லியிருக்கிறார்! 'அவர்களின் இரத்தம் தோய்ந்திருந்த வாள்கள் இனிக் கலப்பைகளாகட்டும்' என்று ஐசேயாவின் வாக்கியத்தை அநுவதித்தார். ஆனால் இங்கே "அவர்களின்" என்பது யாரைக்குறிப்பிடுகிறது? ஜெர்மனியை ஜப்பானை, இன்னும் அமெரிக்கா அஞ்சக்கூடிய ஏனைய நாடுகளைத்தான் ட்ரூமன் குறிப்பிடுகிறார். அமெரிக்கா தான்மாத்திரம் தன் ஆயுதங்களைப் பெருக்கிக்கொண்டு, கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து அணுக்குண்டுகளை உற்பத்தி செய்யலாம். ஆனல்; மற்ற நாடுகள் யாவும் கலப்பைகளும் பயிர்க் கத்திகளும் செய்யவேண்டும்!

அமெரிக்கா இன்று தன்னிடம் உள்ள அணுக்குண்டு ரகசியத்தை வெளியிடாமல் வைத்திருப்பதன்நோக்கம் என்ன? இந்த இரகசியம் தன்னிடம் இருந்தால் தான்மாத்திரம் ஏக வல்லரசாக விளங்கி, மற்றும் நாடுகள் ஒன்றுக்கொன்று சண்டை செய்யாமல் பார்த்துக்கொண்டிருக்கலாம். சண்டைசெய்யும் நாடுகளுக்கு பள்ளிக்கூடச்சட்டாம்பிள்ளை, பிள்ளைகளுக்குப் பிரம்பைக் காட்டிப் பயமுறுத்துவதுபோல, தனது அணுக்குண்டைக் காட்டி அவற்றை அடக்கலாம் என எண்ணிக்கொள்ளுகிறது. இப்படியான மனோபாவத்தைக் கண்டு நாம் அஞ்சவேண்டியதில்லை. அமெரிக்கா எண்ணுகிறபடி எதுவும் நடக்கப்போகிறதும் இல்லை. உலகம் இப்போது ஒற்றுமையை நாடி வெகுதூரம் முன்னேறிக்கொண்டு போகிறது. உலக சமஷ்டி ஒன்று ஏற்பட, உலக மக்கள் யாவரும் எல்லாரும் ஓர் குலம். எல்லாரும் ஓர் ஜாதியாய் வாழப் பிரார்த்திப்போமாக.

# அதிக துணிகள்?

## துணிக் கட்டுப்பாட்டதிகாரி நம்பிக்கை

### இந்திய அதிகாரிகளுடன் பேச்சு

இலங்கையின் துணிக் கட்டுப்பாட்டு உதவி அதிகாரியாயுள்ள மிஸ்டர் M. F. டீ. S. ஜெயரத்தின, இலங்கைக்குத் துணிகள் பெறுவது சம்பந்தமாக இந்திய அரசினருடன் பேச்சுவார்த்தைகள் நிகழ்த்திவிட்டு இலங்கைக்குமீண்டிருக்கிறார் இவர் இந்தியாவில் உள்ள இலங்கைத் துணி ஏற்றுமதி உதவியதிகாரியையும், பிரபல வர்த்தகர்களையும் கண்டு சம்பாஷித்து, இலங்கைக்கு இப்போதிலும் பார்க்க அதிக துணிகள் அனுப்பவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியதாகத் தெரிகிறது. இதன்பயனாக, ஜூலை மாதம் 15ம் திகதி முதல் துணிகள் ஒழுங்காக ஏற்றுமதி செய்யப்படுமென்று சென்னை அதிகாரிகள் மிஸ்டர் ஜெயரத்தினவிற்குக் கூறியிருக்கிறார்கள்.

இந்தியாவிலிருந்து துணிகள் இறக்குமதி செய்யும் இலங்கை வர்த்தகர்களுக்கு அரசாங்கம் வேண்டிய சகல உதவிகளையும் செய்யும் என்று மிஸ்டர் ஜெயரத்தின கூறுகிறார்.

# பட்டினியால் இறந்தால்?

## உத்தியோகத்தரே பொறுப்பாளிகள்!

### வங்காள அதிகாரிகளுக்கு எச்சரிக்கை!

வங்காளத்தைச்சேர்ந்த டாக்காப்பிரிவுக் கிராமாதிகாரிகளுக்குப் பிரதம அதிகாரி ஓர் சுற்று நிருபத்தை விடுத்திருக்கிறார். "உங்களுங்கள்கிராமங்களில் உள்ள உணவு நிலைமையை அபிவிருத்தி செய்தல் உங்கள் கடமையாகும். உங்களுங்கள் கிராமங்களில் உள்ளவர்கள் பட்டினியால் வாடி இறப்பார்களேயானல், அதற்குப் பொறுப்பாளி நீங்களேயாவீர் என்பதை நீங்கள் நல்லாய் உணர்ந்துகொள்ள வேண்டியது. உணவுநிலை மோசமாகிவிட்டது என்று நீங்கள் வாளாவிருக்கக்கூடாது. நிலைமையை உடனுக்குடன் விசாரித்து அறிந்து, வேண்டிய உதவிகளை அரசாங்கத்திடம் பெற்று ஊரவர்க்குக் கொடுப்பது உங்களது முதற் கடமை என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் உணர்ந்திருக்க வேண்டும்" என்னும் கருத்துப்பட அச் சுற்றுநிருபம் கூறுகிறது.

வங்காளத்தில், பல இடங்களுல் இப்போது உணவுப் பஞ்சம் தாண்டவமாடி வருகிறது. சென்றவாரம் மீமன்சிங் பகுதியில் ஒருவர் பட்டினியால் இறந்தார் என்று ஓர் செய்தி கூறுகிறது.

# எங்கும் பசுமை! எங்கும் செழுமை

## நிலாவரைத் திட்டத்தால் நிகழும் அதிசயம் ஆறில்லாக் குறையை அகற்றிய விந்தை

### நாள் ஒன்றிற்கு 15 லட்சம் கலன் தண்ணீர் வயல்களுக்குப் பாய்ச்சப் படுகின்றது

(நமது நிருபர்)

சென்ற 6-6-46 ல் நிலாவரை நீர் இறைக்க ஆரம்பிக்கப்பட்டது ஞாயிற்றுக்கிழமைகளில்நீர் இறைக்கப்படுவதில்லை. ஏனைய நாட்களில் தினந்தோறும் 12 மணித்தியாலம் இறைக்கப்படுகிறது. கமத்தொழில் அரசாங்கத்தின் மேற்பார்வையில் வெட்டப்பட்ட வாய்க்கால்வழியே ஓடிச் சிறுப்பிட்டி வயல்வெளியில் நீர்ப்பாய்ச்சுகிறது. நீர்வேலிக்குரிய வாய்க்கால் வெட்டிப் பூர்த்தியாகும் நிலையிலிருக்கிறது. சிறுப்பிட்டி வயல்களில் சிறுபோக நெல் விதைத்திருக்கிறார்கள். பொதுஜனங்கள் மிகுந்த உற்சாகத்தோடு நிலாவரை நீரைப் பாய்ச்சுகிறார்கள். யாழ்ப்பாணத்தில் ஆறில்லாக் குறை நீங்கிவிட்டது என்று ஜனங்கள் வர்ணிக்கிறார்கள் சிறுப்பிட்டி வாய்க்காலுக்கு இரு பக்கங்களிலும் வாழை, கத்தரி, தினை முதலிய பயிர்களைக்கொண்ட தோட்டங்கள் நூற்றுக்கணக்கான பரப்பில் செய்கைபண்ணப்படுகின்றன. அத்தோட்டங்களுக்கும் நிலாவரை நீர்ப்பாய்ச்சப்படுகிறது, வாய்க்கால் ஓரங்களில் புல்பூண்டுகள் பொலிகின்றன. நிலாவரை நீரை தங்கள் தோட்டங்களுக்குப் பாய்ச்சுவதில் ஒவ்வொருவரும் போட்டியிடுகின்றனர்.

நிலாவரைநீரை வெளியேற்றுங் குழாய் 10 அங்குல விட்டமானது. 12 மணித்தியாலத்தில் ஒரு ஜல சூத்திரம் 15 லட்சம் கலன் வெளியேற்றுகிறது. 10 அங்குலக் குழாயினுல் ஏறக்குறைய 7 மைல் வேகத்தில் நீர் வெளியேறியது குழாய் நீருள் ஆழத்துக்கு விடப்பட்டிருந்தது. நீர் 7 மைல் வேகத்தில் இழுக்கப்பட்டதாலும் குழாயை ஆழத்தில் விட்டதாலும் ஆரம்பத்தில் 80 அடி ஆழத்தில் காணப்பட்ட உப்புநீர் 65 அடி வரையில் காணப்பட்டதென்று அறிஞர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். அதனுல் நீர் வெளியேறும் வேகம் மூன்றரை மைலாகவும் குழாயின் ஆழம் நீருக்குள் 5 அடியாகவும் மாற்றப்பட்டிருக்கின்றன. மாற்றியபின் உப்புநீர் படிப்படியாகப் பழைய நிலைக்குச் செல்கின்றது நிலாவரைத் திட்டம் பூரணமாகவும் விரைவாகவும் நிறைவேற்றப்படும் என்பதில் பொதுசனங்கள் சிறிதும் சந்தேகப்படவேண்டியதில்லை.

## சில இடங்களில் வேலைநிறுத்தம் நின்றது

களனிவலி, கேகாலைப் பகுதிகளில் [illegible]000 தொழிலாளர் நடத்திவந்த இந்திய தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத் சென்ற 20-ம் திகதி புதன்கிழமையுடன் நிறுத்தப்பட்டது. ஹட்டன் தேயிலைத் தோட்டங்களில் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறும் அவசியமாயின் வேறிடங்களுக்கும் வேலைநிறுத்தம் பரவும் என்று இலங்கை இந்தியக் காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீ ஜி. ஆர். மேத்தா வெளியிட்டுள்ள ஓர் அறிக்கை கூறுகிறது.

## இலங்கை ஆயுர்வேத வைத்திய கலாசாலை யாழ்ப்பாணம்

### 1946-ம் ஆண்டு பரீக்ஷைப் பெறுபேறுகள்

1946-ம் ஆண்டு பங்குனிமாதம் நடைபெற்ற வருடாந்தப் பரீக்ஷையில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர்களைத் தராதர ஒழுங்கின்படி வட இலங்கைச் சுதேச வைத்திய சபையார் கீழ்க் கண்டவாறு வெளியிட்டிருக்கிறார்கள்.

4-ம் வருடம் D. A. M.

| | | |
|---|---|---|
| 1. | செ சுப்பிரமணியம் | 2-ம் பிரிவு |
| 2. | பே அருளப்பு | ,, |
| 3. | சி. வைத்தியலிங்கம் | ,, |

3-ம் வருடம் I. A. M.

| | | |
|---|---|---|
| 1. | கா. சிவசுப்பிரமணியம் | 1-ம் பிரிவு |
| 2 | ஆ திருநாவுக்கரசு | 3 ம் ,, |
| 3. | சி. வைத்தியலிங்கம் | 3-ம் ,, |
| 4. | க. வேலாயுதபிள்ளை | 3 ம் ,, |

2-ம் வருடம் S. A. M.

| | | |
|---|---|---|
| 1. | சி. குமாரசுவாமி | 2-ம் பிரிவு |
| 2 | பொ. ஸ்ரீபதிசர்மா | 3-ம் ,, |
| 3 | க. தம்பாபிள்ளை | 3-ம் ,, |

முதலாம் வருடம் Pre-medical

| | | |
|---|---|---|
| 1. | ஆ நாகராஜசர்மர் | 2-ம் பிரிவு |
| 2. | சி. அம்பலவாணர் | 3-ம் ,, |
| 3 | ச. பரமானந்தன் | 3-ம் ,, |
| 4. | ச. இராசையா | 3-ம் ,, |
| 5. | பொ ஸ்ரீபதிசர்மா | 3 ம் ,, |

## கொழும்புத் தமிழ்க் கழகம்

நிகழும் விய வருடம் ஆனிமாதம் 16-ந் தேதி (30-6-46) ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் இக்கழகத்தின் நான்காவதுஆண்டு நிறைவுவிழா காலை 8.45 மணி முதல் நடைபெறும் என்று அறிகிறோம்

## துரோகிக்கு 6வருஷத் தண்டனை

கனடியப் பாராளுமன்றத்து அங்கத்தவராயிருந்துகொண்டு, அணுக்குண்டுவிஷயமான ரகசியங்களை ருஷியாவுக்கு அறிவிக்க முயற்சித்தார் என்றகுற்றத்தின்பேரில்பிரெட்ரோஸ் என்பவர் கனடா தேச நீதிஸதலத்தால் 6 வருஷச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

கேட்டார்" 'பெண்பிள்ளை பெற்றவர் பிடிவாதஞ் செய்ய முடியுமா?" என்று என் சிற்றன்னை சொல்ல, "அக்காளின் கல்யாணக் காட்சியை நான் இங்கிருந்து பார்க்கத்தான் வேணும்: ஆனதால் எங்கள் வீட்டிலேதான் கல்யாணம் நடக்கவேண்டும்" என்றாள் என் தங்கை: நான் ஒன்றும் பேசாமல் நின்றேன்;

### "தெய்வத்திற்குச் சம்மதமில்லை போலும்"

என் சிற்றப்பா தன் படுக்கை யருகில் என்னை இருக்கச்செய்து "என் அருமையான மகளே, உன் அப்பர் அன்னை இருவரு மில்லாத சமயத்தில் நானும் என் மனைவியும் உன் கருமத்தைச் சீர் சிறப்பாகச் செய்து வைக்கலாமென உத்தேசித்திருந்தோம்: தெய்வத்திற்கு அது சம்மதமில்லை போலும்; நான் கிடக்குங்கிடை உனக்குத் தெரியுந் தானேயம்மா, கல்யாண கருமத்தைத் தவணையிடும்படி சொன்னாலும் வரன்பக்கத்தார் உடன்படுகின்றிலர்; பரம சங்கடமாயிருக்கின்றதே; நான் என்ன செய்வேனடியம்மா, உன்னைத் தங்கள் ஊருக்கு அழைத்துக் கொண்டுபோய் ஆகவேண்டிய கல்யாணச் சடங்குகளையெல்லாம் அங்கேதானே செய்யப்போகிறார்களாம்; அதற்கு நாங்கள் உடன்படாவிட்டால் இந்தச் சம்பந்தம் குழம்பிப் போம்; சுகமானவுடன் நான் உன்னிடம் வருவேன்; உனக்குச் சம்மதந்தானே மகளே" என்று கண்களில் நீர்ததும்ப என்னைக் கேட்டார்: "உங்களுக்கு எது சம்மதமோ அது எனக்குஞ் சம்மதந்தான், சிற்றப்பா" என்று நான் சொன்னேன்; என் சிறியதந்தையார் எங்கள் மூவரையும் அறையிலிருந்து அகலச்செய்துவிட்டு, வரன் பக்கத்தாரைத் தம்மிடம் அழைத்து "ஐயா, அன்னை தந்தையில்லா அநாதப்பிள்ளை, முதல் ஆண்டவன் துணை, இரண்டாவது உங்களை நம்பி உங்களிடம் ஒப்படைக்கிறேன்; அண்ணனுடைய அருமை மகளாகிய இந்தப் பெண்ணையும் என் மகளையும் நான் பேதமின்றி என் இரு கண்மணிகள் போல வளர்த்தேன்; அருமையான குணமுடையவள்; பொறுமைபூண்டவள்: கோபமென்பதை யறியாள், இன்சொல்லன்றி வன்சொல் வழங்காள்; பிறந்த வீட்டிற்கும் புகுந்தவீட்டிற்கும் இலட்சுமியாவாள்; சிறுபிள்ளை, அறிந்தோ அறியாமலோ அவள் எதும் குற்றஞ் செய்தாலும் பொறுத்துக் கொள்ளுங்கள்: உங்களுக்கு நான் அதிகஞ் சொல்லவேண்டியதில்லை; உங்களிடத்தில் அடைக்கலமாகத் தருகிறேன்; உங்கள் வீட்டிற்குரிய பெண்களை இங்கே அழைத்து என் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு போங்கள்" என்று கல்லுங்கரையச் சொன்னாராம் என் சிற்றப்பர். வரன் வீட்டிலிருந்து வந்தவர்களும் என் சிறிய தந்தையாருக்குத் தங்கள்மீது நம்பிக்கையுண்டாகும்வண்ணம் பேசி, தங்களுள் ஒருவரைத் தங்கள் ஊருக்கு அனுப்ப, அவர் அடுத்தநாள் அதிகாலையில் மங்கலமான ஒரு பேரிளம் பெண்ணோடும், ஒரு இளம் பெண்ணோடும் எங்கள் வீட்டில் வந்து சேர்ந்தார்.

### "தந்தையொடு கல்விபோம்"

"ஆச்சி, கேட்கிறேனென்றுகோபிக்காதீர்கள், பேரிளம்பெண்ணுக்கும் இளம்பெண்ணுக்குமுள்ள பேதமென்ன" என்று இராமன் இடையிற் கேட்க, "அப்பனே, பேரிளம் பெண் நாற்பது வயசிற்கு மேற்பட்டவள் இளம்பெண் 16 வயசு தொடக்கம் 25 வயசு வரையிலுள்ளவளென்றெண்ணிக்கொள்" என்று அந்தப் பாலியதுறவியம்மாள் பதில்சொல்ல "அம்மா, நான் இளம் பெண்ணைக் காட்டிலும் பேரிளம்பெண் இன்னமும் வயசு குறைந்தவளென்றல்லவா எண்ணிவிட்டேன் என்றான்; "ஏன் அப்பனே, நீ கொஞ்சமும் படிக்கவில்லையா" என்று அந்த அம்மாள் கேட்க 'நான் அற்பமேனும் படிக்கவில்லையம்மா. சிறுபிராயத்தில் என்னை என் தகப்பனார் பள்ளிக்கூடத்திற் கொண்டுபோய்ச் சேர்த்து இவனை நல்லாய்ப் படிப்பிக்கவேண்டுமென்று உபாத்தியாயருக்குச் சொல்ல, உபாத்தியாயர் என்னை அவதானமாகப் பார்த்து இவன் இப்பொழுது விவேகிபோற் காணப்படுகிறான், ஆனால் வயசு ஏற ஏற இவன் மந்தனவான் போற் புலப்படுகிறது; இதனை நான் படிப்பிக்கும் பல பிள்ளைகளிடத்தில் அவதானித்து வந்தேன்" என்றார்; அவர் அப்படிச் சொல்லக் கேட்ட என்தகப்பனார் கவலைப்பட, நான் உபாத்தியாயரைப் பார்த்து ஐயா, உபாத்தியாயரே, நீரும் சிறுபிராயத்திலே என்னைப்போல விவேகியாகத்தான் இருந்தீரோ? என்று கேட்டேன்; அதனால் உபாத்தியாயருக்கு உடனே பெருங்கோப மூண்டாக, "இவன் அதனப்பிரசங்கி, எனக்கு அடங்கிப் படிக்கமாட்டான், இவனை ஆரும் வைத்துப் படிப்பிக்கமாட்டார்கள்" என்றுசொல்லி என்னைப் பள்ளிக்கூடத்தில் ஏற்க மறுத்துவிட்டார்களாச்சி, பின்னர்ச் சிறுவயசில் என்பிதா செத்துப்போய்விட, 'தந்தையொடு கல்விபோம்" என்று படித்தவர்கள் சொல்லுவார்களே, அப்படியெனக்குக் கல்வியில்லாமற் போய்விட்டதாச்சி; என்விஷயம் ஒருபுறங்கிடக்க, ஆச்சி உங்கள் வரலாற்றைச் சொல்லுங்கள்! என்றான் இராமன்.

—வரும்.

## திருச்சி ரேடியோ

**திங்கள் யூலை 1**

காலை 7-15 கீசாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி கே சர்மா க்கண்ணு நாதஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 சிவபுரம் இசைத்தொகுப்பு 8-30 எஸ் ஐயா, எஸ் ஸ்ரீமதி பாட்டு 9 முடிவு.

1 காம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் ஜயா எஸ் ஸ்ரீமதி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 எஸ் ஜயா எஸ் ஸ்ரீமதி பாட்டு 2-15 கல்விஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 டி கே ஆர் மாரிக்கண்ணு பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 இரு குரலிசை 7 15 முன்னேற்றம் 7-45 தஞ்சாவூர் லட்சுமி நாராயணபாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 எல் கணபதியா பிள்ளை வயலின் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள்வானிலை 9.45 எல் கணபதியாபிள்ளை வயலின் 10 இசைவேளை 10-30 முடிவு.

# இந்திய அரசியல்

### நிராகரிப்பு

இடைக்கால அரசாங்கம் அமைக்கும் விஷயத்தில் இராஜப் பிரதிநிதி வகுத்துள்ள திட்டத்தைக் காங்கிரஸ் நிராகரித்துவிட்டது. காங்கிரஸ் விதித்த மூன்று நிபந்தனைகளில் பிரதானமானது தனக்குரிய 6 ஸ்தானங்களிற்கு எவரையேனும் நியமிக்கத் தனக்குப் பூரண அதிகாரம் இருக்கவேண்டும் என்பது. இது மிகவும் நியாயமான கோரிக்கை என்பதை எவரும் மறுக்கமுடியாது தனக்குரிய ஸ்தானங்கள் விஷயத்தில் முஸ்லீம் லீகிற்குப் பூரண அதிகாரம் உண்டு அப்படியான உரிமையைக் காங்கிரசுக்கு அளிக்க, ஜின்னாவின் பிடிவாதத்தினால் இராசப்பிரதிநிதி மறுத்துவிட்டார். தனக்குரிய 6 ஸ்தானங்களில் ஒன்றைத் தேசிய முஸ்லீமுக்குக் கொடுக்கவேண்டும் என்று காங்கிரஸ் வற்புறுத்தியது. முஸ்லீம்களின் ஏகப் பிரதிநிதியாக உள்ளது முஸ்லீம் லீக். அதன் அதிகாரத்துக்கு மீறிய எந்த முஸ்லீமுக்கும் இடம் கொடுக்கக்கூடாது என்று ஜின்னா வாதித்து, இராஜப்பிரதிநிதியையும் தனக்குச் சாதகமாக உபயோகித்துக்கொண்டார்.

●

### இனி நடப்பது என்ன?

காங்கிரஸ் மாத்திரமன்றி, சீக்கியரும், இராசப்பிரதிநிதி வகுத்துள்ள இடைக்கால ஒழுங்கை நிராகரித்துவிட்டார்கள். ஆகவே, இனி நடப்பது என்ன? இந்தத் திட்டத்துக்கு ஏதாவது ஒன்று அல்லது பல கட்சிகள் விரோதமாக நின்று இதனைப் பகிஷ்கரித்தாலும், வேறும் பிரமுகர்களை அவர்களின் இடத்துக்கு நியமித்து இந்தத் திட்டத்தை அமுல் நடத்தியேதீருவோம் என்று இதனை வெளியிடுங் காலத்தில் இராசப்பிரதிநிதி கூறினர் அதன்படிக்கு காங்கிரஸ் சீக்கியா என்பவர்களின் ஒத்துழைப்பு இல்லாமலே, இராசப்பிரதிநிதியும் பிரிட்டிஷ் அரசாங்கமும் தமது இடைக்காலத் திட்டத்தை முஸ்லிம்லீக்கின் உதவியுடன் நடத்தி வைப்பரா என்பது கேள்வி. இவ்விஷயமாக இராசப் பிரதிநிதியாவது பிரிட்டிஷ் அரசாங்கமாவது இன்னும் ஓர் அறிக்கையும் விடவில்லை. இனி என்ன நிகழவிருக்கிறது என்பதை அகில உலகமும் அங்கலாய்ப்புடன் நோக்குகிறது.

●

### நீண்டகால ஒழுங்கு

இடைக்கால ஒழுங்கு ஒன்றைவிட, பிரிட்டிஷ் மந்திரிகள் நீண்டகால ஏற்பாடு ஒன்றையும் செய்தார்கள். அதனைக் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளுமா? அரசியல் நிர்ணய சபைக்குத் தன் பிரதிநிதிகளை அனுப்பி, எதிர்கால இந்திய சுதந்திர அரசியலை வகுக்குமா? இக்கேள்விக்குக் காங்கிரஸ் இன்னும் முடிவான பதிலைக் கொடுக்கவில்லை. இடைக்காலதிட்டத்தை நிராகரித்துவிட்டு, நீண்டகால ஒழுங்கை ஏற்றுக்கொண்டால் அதனால் பயன்கிடைக்குமா? இடைக்கால அரசாங்கத்திற் பங்குபற்றாமல், நீண்டகால அரசியலை வகுக்கமுடியுமா என்னும் விஷயத்தில் இப்போது காங்கிரஸ் வாசிகளுக்கிடையே பலத்த விவாதங்கள் நிகழுகின்றன.

●

### நீண்டகால அமைப்பு அங்கீகாரம்

நீண்டகால அமைப்புத் திட்டத்தைக் காங்கிரஸ் ஏற்றுக்கொள்வதெனத் தீர்மானித்துவிட்டது என்று பிந்திக்கிடைத்த தந்திச் செய்தி ஒன்று கூறுகிறது இந்த நீண்டகாலத்திட்டத்தில் ஒருசில நூனஅம்சங்கள் இருந்தபோதலும், அவற்றை நடைமுறையில் திருத்திக்கொள்ளலாம் என்பது காங்கிரசின் கொள்கை. இனி, அரசியல் நிர்ணயசபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வேலையிற் காங்கிரஸ் ஈடுபட்டிருக்கிறது. அரசியல் நிர்ணயசபையில் காங்கிரஸ் வாதிகளைத்தான் தெரிவு செய்யவேண்டும் என்பது நியதியல்லவென்று காங்கிரஸ் விதித்திருக்கிறது. சேர் தேஜ் பகதூர் சப்ரு, டக்ரர் M. R. ஜெயக்கர் முதலாம் பிரமுகர்கள் அரசியல் நிர்ணய சபையில் இடம்பெறுதற்காகவே காங்கிரஸ் இத்தகைய தீர்மானஞ் செய்திருக்கிறது. இன்னும், காங்கிரஸ் மாகாணங்களிற் பிரதம மந்திரிகளாயுள்ளவர்களை, அரசியல் நிர்ணயச் சபைக்குப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யவொண்ணாதென்றும் காங்கிரஸ் விதித்திருக்கிறது. மாகாண நிர்வாகம் செவ்வனே நடைபெறுதற்காகவே இவ்விதி இயற்றப்பட்டிருக்கிறது

●

### பிந்திய செய்தி

முஸ்லீம்லீக், இராஜப் பிரதிநிதியின் இடைக்கால ஒழுங்கை அங்கீகரித்தபோதிலும், காங்கிரஸ் இல்லாமல் அப்படியான ஓர் அரசாங்கத்தை அமைக்கமுடியாது என்று கருதி, முழுவதும் உத்தியோகத்தரையே கொண்ட ஓர் தற்காலிக அரசாங்கத்தை நிறுவ இராசப்பிரதிநிதி தீர்மானித்துவிட்டார்.


## குடைமுத்திரை (மார்க்) ஓடுகள்

நீங்கள் நவமாகக் கட்டியெழுப்பும் கட்டிடங்களுக்கு இன்றியமையாத

**கலிக்கற் ஓடுகள்**

இவைகளின் கனம் மிகவும் குறைக்கப்பட்டு, வயிரம் மிகவும் கூட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவைகளினல் வேயப்படும் கூரைகளுக்குப் பாரம் மிகக் குறைவாயிருக்கும். இவைகளின் கனத்துடன், இவைகளால்வேயப்பட்டிருக்கும் பரப்பை ஒத்துப்பார்த்தால் விசாலம் மிகவும் அதிகமாய்க் காணப்படும்.

காற்றினல் உடையாது. மழையினல் நீர் பொசியாது. மிகவும் கரிசனையாகவும், நுணுநுணுக்கமாகவும் செய்த ஆராய்ச்சியின் பயனவே இவைகள் தயாரிக்கப்பட்டன.

ஓடுகள் வேண்டுமாயின் எவ்வளவு தேவையென்று ஏலவே 'ஏசண்டுகளுடன்' தாமதியாது பதிவுசெய்து வைப்பது நன்று, வருகிறவாரம் ஒருகப்பல் ஓடுகள் இறக்குமதி செய்வோம்,


'சோல் ஏஜென்ஸ்'

ஜே. செரூபிம் அன் பிறதர்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Mis 243 B 12-3—12-9 (வெ)



மிகச் சிறந்த புதிய **ஆர்மோனியங்கள்**



விலைக்கிருக்கின்றன

**எந்த சீதோஷ்ண காலத்திலும் பாவிக்கலாம்**

சங்கீதக் கருவிகள் உத்தரவாதத்துடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்

**கல்கத்தா மோகன ப்ளூட் ஆர்மோனியக் கொம்பனி,**

484 K K S ரோட், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்,

(Mis 98 28-6—28-9) (வெ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலைப்பொழுது

(வ. குகசர்மா, தெல்லிப்பழை)

பண்டைய பெருமக்கள் ஒரு தினத்தை காலை, நண்பகல், மாலை, யாமம், வைகறை எனப் பல சிறு பொழுதுகளாக வகுத்தனர். இவற்றில் ஒவ்வொன்றையும் ஒவ்வோர் வகையிற் சிறந்ததென எடுத்துக் கூறினும், காலைப் பொழுதே யாவற்றிலும் சிறந்ததாக ஆன்றோரால் எடுத்துப் பேசப்பட்டிருக்கிறது.

மனத்தெளிவு இயற்கையின்பத் தெய்வீக சக்தி, நோய்கள் மாயும் தன்மை, இவையாவும் காலைப்பொழுதிற் றங்கியிருக்கிறது. ஓர் அரோகுண முடையவன் கூட காலையில் சாந்த நிலையடைகின்றான். நோயாளியின் தேகத்தில் மாறுபட்டுநிற்கும் மூன்று வித நாடிகளும் காலையில் சுதநிலை யடைகின்றன. காலைக் கதிரவனின் வணக்கத்தால் எத்தனையோ உஷ்ணம் சம்பந்தமான நோய்கள் மாறியிருக்கின்றன.

'மன்னுக மடந்தையின் புதை யிருட் படாம் போக நீக்கி" யெழும்ப காலையிளஞ்சூரியன், உலகத்திலே உள்ள உயிர்களின் அஞ்ஞான இருளையும் போக்கி அவைகட்கு மனவெழுச்சியையும் கொடுத் தெழுகின்றான். சூரியன் குணதிசை எழுந்தவுடன் நடப்பதைப் பாருங்கள்.

'வனமெழுந்தன வனசமுமெழுந்தன வரியி
னினமெழுந்தன மாக்களுமெழுந்தன வெழிசே
ரனமெழுந்தன புள்ளெலாமெழுந்தன அவற்றின்
மனமெழுந்தன எழுந்தன மக்கள்தம் தொகையே'

இவையாவும் நித்தியமும் எம்முன் நடக்கும் காட்சிகள், ஆனால் செய்யுளில் எவ்வளவு விறுவிறுப்பாக இருக்கின்றது; மற்றுமோர் காட்சியைப் பார்ப்போம்.

ஆதவன் இருளைப் பருகிக் குணதிசையில் உதயமாயினன். அப்போது ஆகாயத்தில் உள்ள நட்சத்திரக் கூட்டங்கள் ஆதவன் பேரொளியினால் மங்கி மறைந்து போகின்றன. இதை ஓர் சிறந்த உவமானத்தைப் பக்தியுங் கவிரசத்தியும் ஒருங்கே அமைந்த ஒருவர் புகுத்தியிருக்கிறார். தேவர்கள் யாவரும் சிவபெருமானை வணங்கப்போகிறார்களாம். அந்நேரம் அவர்கள் யாவரும் ஒளிவீசும் இரத்தினங்கள் அழுத்தப் பெற்ற முடிகளைத் தலையில் அணிகிறார்கள். நளபகராசன் அணிந்த கிரீடத்தை 'மழுவனைகதிர் யாவையும் சேர்த்தென' என்பதாக அதிவீரராமபாண்டியன் வர்ணிக்கிறார். எனவே இத் தேவர்கள் சூடிய முடி எவ்வளவு பிரகாசம் பொருந்தியதென ஒருவாறு ஊகிக்கலாம்.

எவ்வளவு ஒளி வீசியபோதிலும் அதை மறைக்கக்கூடிய பேரொளி ஒன்று உண்டு என்பதை அறிந்தோ அறியாமலோ கிரீடங்களை அணிந்து செல்லுகிறார்கள். இவர்கள் இறைவன் முன் போனவுடன் இந்தக் கிரீடங்களின் செயற்கை ஒளிகள் இறைவனின் பேரருட்பிழம்பின்முன் அற்று விடுகின்றன. தேவர்கள் முடியில் அழுத்தப்பெற்ற இரத்தினங்களான விண்மீன்களை இறைவன் சூரியன் இச்சம்பவத்தை விளக்கும் அடிகளைப் பார்ப்போம்.

"அண்ணாமலையான் அடிக்கமலஞ்
சென்றிறைஞ்சுவ
விண்ணோர் முடியின் மணித்தொகை
வீறற்றாற்போற்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள்
தாமகல"

என்பது. இந்த வர்ணனை இறைவன் பெருமையையும் அதன் மூலமாகத் தெய்வ சிந்தனையையும் தூண்டி விடுகிறது.

சூரியன் உதயமாகும்போது குமுத மலர்கள் குவிகின்றன. அப்போது அதனுள் தேனுண்ணக் கூடியிருந்த வண்டுக் கூட்டங்கள் தேனின் மயக்கத்தில் அமிழ்ந்தியிருக்கும் போதே குமுதமலர் இதழ்கள் குவிந்துவிட அங்கேயே தங்கிவிடுகின்றன. முதல் நாள் மாலைப்பொழுதின்கண் தாமரை மலர் குவியும்போது உள்ளிருந்த வண்டுகள் இப்போது அம்மலர்விரிய வெளியே பறக்கின்றன. குமுதமும் தாமரையும் சூரியனின் இரு கரங்களாக வர்ணிக்கும் கவிஞன் ஒரு கரத்தால் வண்டுகளைப் பொத்தி மறைத்து மறுகையில் காட்டும் சித்துக்களைக் காட்டும் ஒருவனாக ஆதித்தனைக் கற்பனை பண்ணுகிறான். அவன் சிந்தனை பாட்டாகப் பரிணமிக்கிறது.

'அங்குமுத முட்சில வரிக்குல மடக்கித்
தங்கிய வரிக்குல மெழுத்து தனி
போகப்
பங்கய மலர்த்திரவி பங்கினை யொ
ளித்தோர்
செங்கையை விரித்தவொரு சித்தனையு
மொக்கும்'

இவை காலைப்பொழுது காட்டும் கவின்பெறு தெய்வக் காட்சிகளிற் சில. மேலும் கண்ணுக்கு மாத்திரமன்று காதுக்கும் உடலுக்கும் காலைப்பொழுது இனிய விருந்தளிக்கிறது. இனிக் காலையிலொலிக்கும் இயற்கைத் தெய்வீக கீதங்களைப் பார்ப்போம். 'கூவின பூங்குயில் கூவின கோழி குருகுகளியம்பின இயம்பின சங்கம்' இந்த இயற்கைக் கீதங்களைவிட பெரியோர் வசிக்கும் இடங்களிலும் ஆச்சிரமங்களிலும், கலைகளை அப்பியாசம் செய்வதால் உண்டாகும் ஓசையும் அர்க்கியம் கொடுப்பதால் உண்டாகும் ஓசையும் பிராமணோத்தமர்கள் திரேதாக்கினி வளர்க்கும் ஓசையும் வேதங்களின் ஒலியும் மிகுந்திருக்குமென பழைய நூல்கள் கூறும். இவையெல்லாம் தற்காலத்தில் பெரும்பான்மையான இடங்களில் அருகி விட்டன. ஆச்சிரம வாழ்வு எங்கே? தாரகாலப் பட்டின வாழ்வெங்கே? வேதங்களை ஒழுங்காகக் கற்று திரேதாக்கினி வளர்க்கும் எத்தனை பிராமணோத்தமர்கள் இங்குளர்? பழைய பெருமையில் இன்னும் தொங்கும் யாம் பழையனவற்றை மெல்ல மெல்ல மறந்து வருகிறோம்.

மாணிக்கவாசகர் சூரியன் உதயமாகும் நேரத்தில் தேவ உலகத்தார் யாது செய்கின்றார்கள் என்பதை உலகம் உய்யும் பொருட்டுக் கூறியிருக்கிறார்.

'இன்னிசை வீணையர் யாழினர்
ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர்
ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒரு
பால்'

என்கிறார்.

காலையில் உள்ள அமைதி இயற்கையில் உள்ள இன்பம் மென்மையாக வீசும் பூங்காற்று விருட்சங்களின் மேற்றளிர்களில் படும் சூரியனின் இளவெயில், பட்சிசாலங்கள் எழுப்பும் இன்னொலி, பனிதாங்கி அலர்ந்த புஷ்பங்களின் நறுமணம் இவை எவ்வளவு தூரம் மக்களைக் கடவுளிடம் இழுத்துச் செல்கின்றன. கடவுளை வணங்க நற்றருணம் காலைதான் என்பதையும் காட்டுகின்றன.

# ஈழமும் சோழமும்

'நீர்வை-கோவை'

(முற்றொடர்.)

குளக்கோட்டு மன்னனுடைய பத்திராசனம் வகித்து அனுராதபுரத்தை யரசுபுரிந்த இராசசிங்கனுடைய அடியில் உற்பவித்த "பரிதியின் மாபிறந்தோன் றும் பரிதிபோலக் குலத்தை, பொருவிலா தகிதகார் வேய்ந்த புவனேய கயவாகுப் பேர், நிருபன் வந்தது திக்குச் சைவ நீங்கியே மயமணுகி, திரிசங்க போதி யென்னச் மகப்புமோர் நாமம் பெற்றான்." இவ்வரசன் சமயபேதமின்றி அரசுபுரிந்தானென்று சொல்லப்படுகிறது. "கற்பகநாடனீ தகவின் சொல் வெள்ளரசு தன்னைப் பொற்கல மதனில் வாங்கிப் புரவலனுய்யானத்தி னம்புற வுய்த்தகலால் வெள்ளரசு நாடென்று மேலாக, நற்புவி புகழோர் நாமம் பெற நாடு மன்னோ" இக்காரணத்தினால் அனுராதபுரத்திற்கு வெள்ளரசு நாடென ஓர் காரணநாமம் சூட்டப்பட்டது.

கீர்த்தி வாய்ந்த புவனேய கயவாகு மன்னன் சிறப்பாக இராச்சிய பரிபாலனஞ் செய்து வரும் காலத்திலே, கோணேசப் பெருமானுக்கு உற்சவம் நிகழும் பங்குனிமாத உத்தர தினத்தின் சில நாட்களுக்கு முன் கோணமலையிலுள்ள சில சைவ அடியார்கள் மலர் கொய்யும் பொருட்டு அனுராதபுரத்திலுள்ள பொற்றாமரை வாவியை அடைந்தார்கள். வாவிக் கரையில் வசித்த சமணருக்கும் சைவருக்குமிடையில் 'மலர் கொய்தலைப்பற்றி' வாதம் நடந்தது. அந்த வாதம் கைகலந்த சண்டையாக முற்றியது. ஈற்றில் சைவர் சமணரை வென்று மலர் கொய்து கோணமலைக்குத் திரும்பினார்கள். தோல்விபுற்றசமணர் அரண்மனையை அடைந்து புவனேய கயவாகு மன்னனுக்கு முறையிட்டார்கள். இதைக்கேட்ட மன்னன் அக்கினி போலக் கோபித்துச் சீறி .... .... 'பிறைசேர் வேணி, யேற்றினனை யென்னோ னுறையுளாய் வகுப்பனென்றான்' உடனே போர் முரசு ஒலித்தது. சதுரங்கசேனைகள் திரண்டன. கயவாகு மன்னன் யுத்தசன்னத்தனாய்க் குதிரைமீதிவர்ந்து கோணமலம் நோக்கப்படர்ந்தான். அடர்ந்த வனங்களையும் உயர்ந்த மலைகளையும் ஆறுகளையுங் கடந்து, கோணேசப் பெருமானுடைய திருவடி நிழலை அடைந்த குளக்கோட்டு மன்னரால் அமைக்கப்பட்ட திருக்குளக் கரையை வந்தடைந்தான். அப்பொழுது சூரியன் மேற்றிசையில் மறைந்தான். (புவனேய கயவாகு என்னும்) திரிசங்க போதியின் இரு கண்களும் ஒளியிழந்தன. விரைவிற் கண்ணொளி மறைதலும் அரசன் மனங்கலங்கினான், சரீரம் நடுநடுங்கினான். அவனுடைய எண்ணங்கள் மாறுபட்டன. அன்று அரசன் பட்ட துயரத்துக் கோரளவில்லை. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினான். ஈற்றில் சைவக் கடவுளை மகத்துவமதானென நிச்சயித்தான், படுசையிற் புரண்டு புரண்டு ஆறுதலின்றி சலங்கினான். அப்பொழுது கோணேசப் பெருமான ஓர் அந்தணர் வேடந்தாங்கி அவன்முன் தோன்றி "அந்தத்தில் கோணேசனுலய மழிக்க நீயும், அந்தப் பின்னைந்த ஊரூற சிதைக்கொளி வீய்ந்த கண்கள், இந்தநீற்றைப் பூசி விருவிழிச்சோதியுண்டாம்" என்றார். கயவாகு மன்னன் இறைஞ்சித் தொழுது இறைவனை வணங்கி இரு கைகளாலும் விபூதி வாங்கித் தரித்தலும் உடனே ஒரு கண்ணுக்கு ஒளியுண்டானது. அரசன் அப்பொழுதடைந்த ஆனந்தத்துக்கு எல்லையில்லை எழுந்தான்; பரவசமடைந்தான்; ஆனந்தக் கூத்தாடினன. அப்பொழுது கோணேசப் பெருமான் மறைந்தருளினார். "என்னையோர் பொருளாக எண்ணி எனனிடர் களைந்த கோணேசப் பெருமானே நான்கண்ட பரம்பொருளாவர். திருவெண்ணீற்றைத் தரிப்பவர்கள் நோயினின்று விடுபடுவதோடல்லாது பிறவி நோயும் நீங்கப்பெறுவர்; திருவெண்ணீற்றை எல்லோருமணியுங்கள்" என்றான். திருக்குளக் காட்சிகளை யெல்லாம் சுற்றிப் பார்த்தான், அளவிலா ஆனந்தங் கொண்டான, இன்று முதலாக இத்திருக்குளத்தைக் "கண் தழை குளம்" என அழையுங்கள் என்றான். இப்பொழுதும் இத்திருக்குளம் சிறிது மாற்றமடைந்து "கந்தளாய்க்குளம்" என்று அழைக்கப்படுகிறது. (வரும்)

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

## சனி ஜூன் 29

காலை: 7.15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 டி ஆர் கிருஷ்ணன் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 டி வேணுகோபால் பாட்டு 8.30 சித்திரகானம் 9 முடிவு.

1 டி ஆர் கிருஷ்ணன் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 குரல் வகை 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 கமலா பாகீரதி பாட்டு 5-40 திருவரங்கந்தாதி விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் வானிலை 6 15 டி வேணுகோபால் பாட்டு 6.30 சித்ரகானம் 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7-15 அன்னத்வேஷம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 வி துரைசாமி ஐயங்கார் வீணை 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 கே வி காளிதாஸ் பாட்டு 10 இசைவேளை 10.30 முடிவு.

## ஞாயிறு ஜூன் 30

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 சி பி ஞானசுந்தரம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 டி சௌடையா வயலின் 8.30 இசைக் கதம்பம் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மாதர்பக்கம் 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2.30 முடிவு.

மாலை: 5 வி ஆர் சாரதா வீணைபாட்டு 5.40 தேவாரானை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 சி பி ஞானசுந்தரம் பாட்டு 6-45 கிராம நிகழ்ச்சிகள் 7 ஜாதியும் வர்ணமும் 7.20 தமிழில் செய்திகள் 7-15 டி என் மாணிக்கம் பாட்டு 8 55 ஆங்கிலப்பேச்சு 9 10 அறிவிப்புகள் வானிலை 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 நாட்டுப் பாடல்கள் 10.10 இசைவேளை 10 30 முடிவு.

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

---

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday June 28, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org